**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP CASE NO.309/2025**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 03-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் -திருமதி.சுப்புலட்சுமி **PW-1** தொழில் -

த/க பெயர் - வயது -

கிராமம் - தாலுக்கா -

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஏற்றக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| S.No. | Documents | Exhibits No. |
|---|---|---|
| 1. | அரச்சலூர் காவல்நிலைய குற்ற எண்.110/2024, முதல் தவகல் அறிக்கை நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.1 |
| 2. | பார்வை மகஜர் நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.2 |

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.03 18:34:33 +0530

| | | |
|---|---|---|
| 3. | மாதிரி வரைபடம் நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.3 |
| 4. | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 33 BT 9542 Honda Activa 6G நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.4 |
| 5. | ஈரோடு ஆர்த்தோ சென்டர் மருத்துவமனை விபத்து பதிவேடு நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.5 |
| 6. | ஈரோடு ஆர்த்தோ சென்டர் காயச்சான்றிதழ் நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.6 |
| 7. | குற்ற இறுதி அறிக்கை நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.7 |
| 8. | STC.246/2024-ல் எழுமாத்தூர் DM CUM JM நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு நீதிமன்ற சான்றளிக்கப்பட்ட நகல் | ம.த.சா.ஆ.8 |
| 9. | மருத்துவ பில்கல் (ரூபாய் 1,09,782/- 27 எண்ணிக்கைகள்) இந்த ஆவணம் 1 மற்றும் 2-ம் மனுதாரரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. | ம.த.சா.ஆ.9 வரிசை |
| 10. | 04.04.2024 முதல் 11.04.2024 வரையிலான டிஸ்சார்ஜ் சம்மரி அசல் | ம.த.சா.ஆ.10 |

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.03 18:34:41 +0530

**<u>1-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

விபத்து எங்கு நடந்தது என்றால் அரச்சலூர் பால் கடை அருகில் நடந்தது. மேற்படி பால் கடை எங்கு உள்ளது என்றால் என் வீட்டிற்கு எதிர் புறத்தில் உள்ளது. விபத்து நடந்த போது எவ்வளவு மணி இருக்கும் என்றால் 7.00 மணி இருக்கும். விபத்து நடந்தபோது இருட்டாக இருக்கும் என்றால் ஆமாம். சம்பவ நேரம் இருட்டாக இருந்தது என்றும் அதனால் நான் 1-ம் எதிர்மனுதாரரின் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையின் குறுக்கே சென்று விபத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரர் சரியான முறையில் மிதமான வேகத்தில்தான் வண்டியை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு தற்போது என்ன வயது என்றால் 62 வயது ஆகிறது. என் வயோதிகத்தின் காரணத்தினால் நிலை தடுமாறி வாகனத்தின் முன்னே விழுந்து விபத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த சாலை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் சாலை என்றால் சரி. ஒன்றாம் எதிர்மனுதாரர் சாலையின் இடது புறமாக சரியான வேகத்தில் சாலை விதிகளை பின்பற்றி வண்டியை ஓட்டி வந்தார் என்றும் நான் தான் இருட்டாக இருந்த சமயம் ரோட்டின் குறுக்காக வண்டி வருவதை கவனிக்காமல் திடீரென சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் 15,000/- ரூபாய் சம்பாத்தியம் செய்து வந்ததாக வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வேலைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.03 18:34:46 +0530

ஏற்பட்டுள்ள காயம் சாதாரண காயம் என்றும் அதற்கு நான் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல. போக்குவரத்து மற்றும் எதிர்கால மருத்துவச் செலவு ஆகியவை மனுவிற்காக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு எந்த நிரந்தர ஊனமும் இல்லை என்றால் சரியல்ல. விபத்தினால் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தகுந்த ஓட்டுனர் உரிமம் ஒன்றாம் எதிர் மனுதாரருக்கு விபத்து சமயத்தில் இருந்தது என்றும் என்னால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும் எனவே ஒன்றாம் எதிர்மனுதாரிடம் நான் இழப்பீடுக் கோர முடியாது என்றும் ஒன்றாம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

<u>2-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

போலீஸ் நிலையத்தில் என் கணவர் சந்திரன் புகார் கொடுத்ததாக தான் ம.த.சா.ஆ.1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவர் கொடுத்திருக்க மாட்டார் அவருடைய பெயர் போட்டு இருப்பார்கள், என் மகன் தான் கொடுத்திருப்பார். நான் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சாலையை கடக்கும்போது விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் சாலையை கடக்க நின்று கொண்டிருந்த போது விபத்து ஏற்பட்டது. இரண்டாம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றும் அவர் அவருடைய பாதையில் சரியாக வந்து கொண்டிருந்தார் என்றும் நான் தான் சாலையை இருபுறமும் பார்க்காமல்

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.03 18:34:51 +0530

சாலையை கடந்து விபத்தை வரவழைத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் என் மகனுடன் தான் இன்று நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் சரி. எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் நான் இழப்பீடு இரண்டாம் எதிர்மனுதாரிடம் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.03.03 18:35:02 +0530

Chief Judicial Magistrate,
Erode.